

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (22.2.2025) சென்னையில் நடைபெற்ற, கட்டா ரவி தேஜா, அக்சயா சத்ராஸ் ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு, மரக்கன்று பசுமைக்கூடை வழங்கி மணமக்களை வாழ்த்தினார். உடன், அமைச்சர் கே.என். நேரு, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (22-2-2025) நடைபெற்ற பெருநகர சென்னை மாநகராட்சி வடக்கு வட்டார துணை ஆணையர் கட்டா ரவி தேஜா. அக்சயா சத்ராஸ் ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினார். இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு. மேயர் திருமதி. ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், ஆணையாளர் ஜெ.குமரகுருபரன். மற்றும் மணமக்கள் வீட்டார் உடனிருந்தனர்.

### நாய்கள் தொல்லையை கட்டுப்படுத்த

# நாடாளுமன்றத்தில் புதிய சட்டம் கொண்டு வர வேண்டும்!

## திருச்சியில் அமைச்சர் கே.என்.நேரு பேட்டி!



திருச்சி, பிப். 24-

திருச்சி மத்திய பேருந்து நிலையம் அருகே உள்ள கலையரங்கம் திருமண மண்டபத்தில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பில் திருச்சி, பெரம்பலூர், அரியலூர், புதுக்கோட்டை, தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர் மற்றும் மயிலாடுதுறை மாவட்டங்களுக்கு உட்பட்ட மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளில் செயல்படுத்தப்பட்டு வரும் வளர்ச்சி திட்ட பணிகள் குறித்த ஆய்வு கூட்டம் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு தலைமையில் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, போக்குவரத் துறை அமைச்சர் எஸ் எஸ். சிவசங்கர், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் மெய்ய நாதன், மாநிலங்களவை உறுப்பினர் கல்யாண சுந்தரம், பாராளுமன்ற உறுப்பினர்கள், துரை வைகோ, அருண் நேரு, முரசொலி, சுதா, திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் பிரதீப் குமார் நகராட்சி ஆணையர் சரவணன் மற்றும் 8 மாவட்டங்களை சேர்ந்த அரசு அதிகாரிகள் சட்டமன்ற உறுப்பினர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் பேசிய அமைச்சர் கே என் நேரு,

தமிழகம் முழுவதும் மேற்கொள்ளப்பட்டு வரும் குடிநீர் திட்ட பணிகள் ஜூலை மாதத்துக்குள் முடிவடையும் குடிநீர் வடிகால் வாரிய பொறியாளர்கள் அலுவலகத்தில் அமர்ந்து பணியாற்றாமல் அந்தந்த பகுதிகளுக்கு நேரடியாக சென்று அங்குள்ள பாதிப்புகள் தேவைகள் தொடர்பாக குறிப்பெடுத்து நிர்வாக இயக்குனருக்கு அனுப்ப வேண்டும் குடிநீர் வாரியத்திற்கு விரைவில் 200 பொறியாளர்கள் நியமிக்கப்பட உள்ளனர்.

நகராட்சி நிர்வாகத் துறையின் மூலம் வளர்ச்சி திட்ட பணிகள் மேற்கொள்வதற்காக ஒவ்வொரு ஆண்டும் ரூபாய் 24 ஆயிரம் கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது இந்த ஆண்டு ஒவ்வொரு மாவட்டத்திலும் தேவைக்கேற்ப புதிய திட்ட பணிகளை செயல்படுத்தவும் இப்போது நடந்து வரும் பணிகளை விரைவாக முடிக்கவும் மாவட்ட வாரியாக ஆய்வுக் கூட்டம் நடத்தப்பட்டு வருகிறது.

8 மாவட்டங்களில் உள்ள 4 மாநகராட்சிகள் 19 நகராட்சிகளில் பல்வேறு திட்டங்களின் சார்பில் ரூபாய் 5,295 கோடி மதிப்பீட்டில் பஸ் ஸ்டாண்டுகள், சந்தைகள், அறிவு சார் மையங்கள், சாலைகள், பூங்காக்கள், நீர்நிலை மேம்பாடு, குடிநீர் வசதி, பாதாள சாக்கடை வசதி போன்ற உட்கட்டமைப்பு பணிகள் நடைபெற்று வருகிறது.

மேலும் இந்த 8 மாவட்டங்களில் உள்ள பேரூராட்சிகளின் மூலம் ரூபாய் 1214.02 கோடி மதிப்பீட்டில் பணிகள் அனுமதிக்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

இந்தாண்டு நடைபெற உள்ள பணிகள் மற்றும் அதற்காக ஒதுக்க வேண்டிய நிதி குறித்து பல்வேறு துறைகளை சேர்ந்த அமைச்சர்கள் அதிகாரிகள் மாநகராட்சி மேயர்கள் உள்ளிட்ட பலருடன் இன்று ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இங்க வந்திருக்கக்கூடிய அனைவரது தேவைகள் மற்றும் திட்டங்கள் குறித்து கேட்டு அறிந்து என்னென்ன பணிகள் மேற்கொள்ள போகிறோம் என்பது குறித்த கணக்கெடுப்பு நடத்தப்பட்டுள்து. இங்கு பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் அந்த பணிகள் அனைத்தும் விரைவில் நடைமுறைப்படுத்தப்படும்.

சொத்து வரியில் 15 ஆண்டுகாலம் என ஒரே நடைமுறையில் இருந்த வரி விதிப்புகள் எல்லாம் இன்று மறுசீரமைக்கப்பட்டு 15 முதல் 20% வரை உயர்த்த வேண்டும் என்று ஒன்றிய அரசு தொடர்ந்து வலியுறுத்துகிறது. வரியை உயர்த்தி வழங்கினால் தான் நிதி தங்களால் தர முடியும் என்று ஒன்றிய அரசு கூறுகிறது. எனவே தான் தமிழக அரசு சட்டமன்றத்தில் ஒரு சட்டத்தை கொண்டு வந்தது ஆண்டுக்கு 6 சதவீதம் மட்டுமே வரி உயர்வு செயல்படுத்தப்படும் ஒவ்வொரு ஆண்டும் 6 சதவீதம் என்ற விகிதாச்சார அடிப்படையில் வரி விதிப்பு கொண்டு வரலாம் என்றும் பேரிடர் காலங்களில் அந்த வரி விதிப்பை நிறுத்தி வைக்கவும் இந்த சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் ட்ரோன் மூலம் சர்வே செய்து கட்டிடத்தை அளந்து வரிவிதிக்கப்பட்டது முதல்வர் உத்தரவின் பேரில் இனி ட்ரோன் சர்வே இருக்காது

ஆறு ஆண்டுகளுக்கு முன்பு இருந்து குப்பை வரி வசூலிக்கப்பட்டு வருகிறது சொத்து வரி வசூலிக்கும் போது முந்தைய ஆண்டுகளிலிருந்து குப்பை வரியை கணக்கெடுக்க வேண்டியது இல்லை நிகழாண்டு முதல் இந்த ஆண்டுக்கான குப்பை வெறியை மட்டும் வசூலித்தால் போதும் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்ட அந்த ஆறு சதவீத வரிவிதிப்பு மட்டுமே இருக்க வேண்டும் வேறு எந்த வரி விதிப்புகளும் இருக்காது.

நாய்கள் தொல்லை அதிகம் இருப்பதாக புகார்கள் வருகிறது நாய்களை பிடிப்பது குறித்து பாராளுமன்றத்தில் புதிய சட்டம் இயற்ற வேண்டும் ஏற்கனவே உள்ள சட்டத்தில் நாய்களைப் பிடித்தால் கருத்தடை செய்து மீண்டும் அதே இடத்தில் விட்டு விட வேண்டும் என தான் கூறியுள்ளது நாய்களைப் பிடித்துக் கொண்டு போனால் சிறையில் வைக்கும் வகையில் அந்த சட்டம் உள்ளது என பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு ஏற்படும்.

எனவே பாராளுமன்றத்தில் இது குறித்து பாராளுமன்ற உறுப்பினர்கள் மூலம் பேசி ஒரு சட்டத்தை கொண்டு வர முயற்சி செய்ய வேண்டும்.

ஸ்மார்ட் சிட்டி திட்ட பணிகள் அனைத்தும் நிறைவடைந்து விட்டது. தற்போது புதிய திட்ட பணிகள் போடப்பட்டு வருகிறது. மெட்ரோ திட்டத்திற்கு 750 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து ஆய்விற்காக அனுப்பப்பட்டுள்ளது.

புதிதாக வைக்கப்பட்ட கோரிக்கைகள் அனைத்தும் ஆய்வு செய்யப்பட்டு முதல்வரின் ஆலோசனையை பெற்று பொது மக்களின் தேவைக்கேற்ப முன்னுரிமை அடிப்படையில் செயல்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று கூறினார்



தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம், கால்நடை மருத்துவ கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் திருநெல்வேலி மூலம் திருச்செந்தூர் வட்டம் அம்மன்புரம் ஊராட்சியில் வைத்து மீன்வளம் மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் மற்றும் தூத்துக்குடி தெற்கு மாவட்ட செயலாளர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் தலைமையில் கால்நடை மருத்துவ முகாம் மற்றும் கால்நடை கண்காட்சி நடைபெற்றது. உடன் மாவட்ட ஆட்சியர் இளம்பகவத், எஸ்.ஆர்.எஸ்.உமரிசங்கர், செங்குழி ஏ.பி. ரமேஷ், பை.மூ. ராமஜெயம், ஞானராஜ், வாள் சுடலை, அரசு வழக்கறிஞர் பாரிக்கண்ணன், நவீன் குமார், சதிஷ்குமார், கே. இளங்கோ, வி.பி.செல்வக்குமார் மாவட்ட வழக்கறிஞர் அமைப்பாளர், முன்னாள் யூனியன் சேர்மன் எஸ்.ஜனகர், மணல்மேடு சுரேஷ், கே.டி.சி.முருகன், கிளைச் செயலாளர் பூச்சிக்காடு முருகேசன், திருச்செந்தூர் மணிகண்டன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.




கூட்டுறவுத்துறை



தமிழ்நாடு முழுவதும்
1000
முதல்வர் மருந்தகங்கள்

திறந்து வைப்பவர்

திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்

- மருந்துகளின் விலை சந்தை விலையை விட 75% வரை குறைவு
- 1500 B.Pharm / D.Pharm பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு
- தொழில் முனைவோருக்கு கூடுதல் நிதி உதவி




நாள் : 24.2.2025 திங்கட்கிழமை, காலை 10.30 மணி
இடம் : அண்ணா நூற்றாண்டு நூலகக் கலையரங்கம், சென்னை

செ.ம.தொ.இ / 198 / வரைகலை / 2025

சொன்னதைச் செய்யும் நம் முதல்வர் !

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in வெளியீடு : இயக்குநர், செய்தி – மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 600 009